SINCE 2013

# We Shine Academy®

guiding you to get through

TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

## DAILY CURRENT AFFAIRS ON O6/MARCH/2026



# ஆளுநர் ஆர்.என்.ரவி மேற்கு வங்கத்துக்கு மாற்றம்

**புது தில்லி, மார்ச் 5:** மேற்கு வங்க ஆளுநர் சி.வி.ஆனந்த போஸ் வியாழக்கிழமை திடீரென தனது பதவியை ராஜிநாமா செய்ததையடுத்து, அந்த மாநிலத்துக்கான புதிய ஆளுநராக தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி நியமிக்கப்பட்டார்.

தமிழக ஆளுநர் பொறுப்பை கேரள மாநில ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் கூடுதலாக வகிப்பார் என குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அறிவித்துள்ளார்.

இதுபோல மேலும் சில மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். இதற்கான உத்தரவை குடியரசுத் தலைவர் வியாழக்கிழமை இரவு பிறப்பித்தார்.

அதன் விவரம்: ஹிமாசல் ஆளு

## கேரள ஆளுநருக்கு தமிழக கூடுதல் பொறுப்பு


ஆர்.என். ரவி


ஆர்.வி.ஆர்லேகர்

களை இவர் நிறுத்திவைத்தது சட்ட விரோதமானது என்று குறிப்பிட்டு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 142-ஐ பயன்படுத்தி அந்த 10 மசோதாக்களுக்கும் உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்தது. அதுமட்டுமன்றி, மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்கள் மீது முடிவெடுக்க ஆளுநர்கள் மற்றும் குடியரசுத் தலைவருக்கு காலக்கெடு நிர்ணயித்து உச்சநீதிமன்றம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், ஆளுநர்கள் மற்றும் குடியரசுத் தலைவருக்கு காலக்கெடு விதித்த விவகாரத்தில் 14 கேள்விகளை எழுப்பி உச்சநீதிமன்றத்திடம் குடியரசுத் தலைவர் விளக்கம் கேட்டார். அதற்கு விளக்கமளித்த

## ஆனந்த போஸ் ராஜிநாமா ஏன்?



மேற்கு வங்க ஆளுநர் சி.வி. ஆனந்த போஸ், தனது பதவியை தில்லியில் ராஜிநாமா செய்த பிறகு பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், 'மேற்கு வங்க ஆளுநராக மூன்றரை ஆண்டுகள் பதவி வகித்துவிட்டேன். அது எனக்குப் போதுமானது' என்றார்.

ஆனால், தனது திடீர் ராஜிநாமாவுக்கான காரணத்தை அவர் தெரிவிக்கவில்லை.

மேற்கு வங்க ஆளுநராக சி.வி.ஆனந்த போஸ் கடந்த 2022-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதி நியமிக்கப்பட்டார். பதவியேற்றது முதல், மம்தா பானர்ஜி தலைமையிலான மாநில அரசுக்கும், ஆளுநருக்கும் மோதல் போக்கு நீடித்து வந்தது. மேற்கு வங்க மாநிலம் விரைவில் பேரவைத் தேர்தலைச் சந்திக்க உள்ள சூழலில், ஆளுநர் பதவியை சி.வி.ஆனந்த போஸ் திடீரென ராஜிநாமா செய்துள்ளார்.

**மம்தா கருத்து:** ஆளுநர் ராஜிநாமா குறித்து தனது சமூக ஊடக பக்கத்தில் பதிவிட்ட மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, 'சி.வி. ஆனந்த

# பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆளுமைகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று கலந்துரையாடல்

**சென்னை, மார்ச் 5:** பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆளுமைகளுடன், முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை (மார்ச் 6) கலந்துரையாடவுள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு அரசின் சார்பில் 'உங்க கனவ சொல்லுங்க' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி தமிழ்நாடு முழுவதிலும் மக்களைச் சந்தித்து அவர்களின் எதிர்பார்ப்புகளைக் கேட்டுத் தெரிந்து பதிவு செய்ய அலுவலர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி, மாநிலம் முழுவதும் 45 நாள்கள் 50,000 தன்னார்வலர்கள் 1.92 கோடி குடும்பங்களின் எதிர்கால கனவுகளை அறிவதற்காக, வீடு வீடாகச் சென்றனர். அப்போது, பொதுமக்களை நேரில் சந்தித்து, திமுக அரசு நடைமுறைப்படுத்தியுள்ள திட்டங்கள் குறித்தும், அவர்களின் எதிர்பார்ப்புகள், எதிர்காலக் கனவுகள் ஆகியவை குறித்தும் கேட்டுஅறிந்து பதிவு செய்துள்ளனர்.

'என் ஊர் என் கனவு' என்ற தலைப்பில் 38 மாவட்டங்களின் 'தொலைநோக்குத் திட்டம் 2030' குறித்து செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன. கருப்பொருள் வல்



நோக்குத் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 10 லட்சம் இளைய சக்திகளின் 'என் கனவு என் எதிர்காலம்' என்ற நோக்கில் செய்திகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இதேபோல, வெளிநாடுகளில் வாழும் தமிழ்ச் சமுதாய மக்களின் கனவுகளையும் அறியும் நோக்கில் 70-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அயலகத் தமிழர்களின் கனவுகளும் திரட்டப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் நிறைவாக, 'கனவு மெய்ப்படும்' எனும் தலைப்பில் சென்னை நத்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இதில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், முக்கிய ஆளுமைகள், முக்கிய நாளிதழ்களின் பதிப்பாளர்கள், தொலைக்காட்சி நிறுவன உரிமையாளர்கள், பத்திரிகைமற்றும்ஊடகநிறுவனங்களின் ஆசிரியர்கள், முக்கிய சமூக வியாளர்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள், கலை, பண்பாடு, இலக்கியம் சார்ந்த ஆளுமைகள், சாதனை இளைஞர்கள், காலநிலை வாகையர்கள் ஆகியோரும் பங்கேற்று தங்கள் கருத்துகளைப் பகிரவுள்ளனர்.

தொடர்ந்து, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா. வைத்திநாதன் 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டுமானங்களின் காட்சித் தொகுப்புகள் குறித்து எடுத்துரைக்கிறார்.

இதைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகர மாநகராட்சி இணை ஆணையர் வீ.ப.ஜெயசீலன் துறைவாரியான சாதனைகள் மீது 6 அமர்வுகளில் இடம் பெறும் நிகழ்வுகள் குறித்து அறிமுகப்படுத்துகிறார். பின்னர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் விளையாட்டு,வேலைவாய்ப்பு மற்றும் மகளிர் நலன் ஆகியவை குறித்து உரையாற்றுகிறார். மேலும், அமைச்சர்களும் தங்களது துறை சார்ந்து பேசவுள்ளனர்.

தொடர்ந்து, ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டுள்ள 'மாவட்ட தொலைநோக்கு ஆவணம்' என்ற ஆவணத்தை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டு, 'தமிழ்நாடு - 2030 பெருங்கனவைப் பறைசாற்றும் திட்டம்' குறித்து சிறப்புரையாற்றுகிறார். இறுதியாக, தலை

# 3 எழுத்தாளர்களுக்கு குடியிருப்புகள்

**முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்**



1. தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் எழுத்தாளர் பொன்னீலனுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் குடியிருப்புக்கான ஆவணங்களை தலைமைச் செயலகத்தில் வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை ந.அருள்.
2. குடியிருப்புக்கான ஆணையைப் பெற்றுக்கொண்ட எழுத்தாளர் ஆ.இரா.வேங்கடாசலபதி. 3. எழுத்தாளர் தாயம்மாள் அறவாணன்.

# பிராந்திய நாடுகளை அச்சுறுத்தும் இஸ்ரேல்-ஈரான் மோதல்



**துபை, மார்ச் 5:** அமெரிக்கா, இஸ்ரேல்-ஈரான் இடையேயான மோதல், அண்டை வளைகுடா நாடுகளையும் தாண்டி அஜர்பைஜான், துருக்கி ஆகிய பிற பிராந்திய நாடுகளையும் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது.

இந்தியாவில் பயிற்சியை முடித்துவிட்டு தாயகம் திரும்பிய ஈரான் போர்க் கப்பலை இலங்கை கடற்பகுதியருகே அமெரிக்க கடற்படை தாக்கி மூழ்கடித்தது. இதில் 87 ஈரான் கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலைக் கண்டித்த ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, இதற்காக அமெரிக்கா மோசமான விளைவுகளை சந்திக்கும் என்று எச்சரித்தார். இதன்தொடர்ச்சியாக, ஈரான் மீண்டும் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இந்த மோதலில் ஒரு புதிய திருப்பமாக, அண்டை வளைகுடா நாடுகளையும் தாண்டி அஜர்பைஜான், துருக்கி வரை பிற பிராந்திய நாடுகளுக்கும் ஈரானின் தாக்குதல்கள் பரவியுள்ளன.

அஜர்பைஜானின் நக்ஷிவன் பகுதியில் உள்ள விமான நிலையம் மற்றும் ஒரு பள்ளிக்கு அருகில் ஈரான் ட்ரோன்கள் விழுந்து வெடித்தன. இதில் இரண்டு பொது மக்கள் காயமடைந்ததாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதேபோல், ஈரானிலிருந்து ஏவப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை, துருக்கியை நோக்கி பாய்ந்தது. சிரியா, இராக்கைக் கடந்து வந்த இந்த ஏவுகணையை, கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியில் நேட்டோ அமைப்பின் வான்பாதுகாப்பு அமைப்பு வெற்றிகரமாக இடைமறித்து அழித்தது.

இந்த ஏவுகணையின் பாகங்கள் தெற்கு துருக்கியில் விழுந்தன. நேட்டோ உறுப்பு நாடான துருக்கி மீது ஈரான் நடத்திய இந்தத் தாக்குதல் முயற்சி, போரில் மேற்கத்திய நாடுகளின் நேரடி தலையீட்டைத் தூண்டும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமை தொடங்கி ஒரு வாரத்தை எட்டும் இந்த மோதலில் இதுவரை ஈரானில் 1,230 பேரும், லெபனானில் 70-க்கும் மேற்பட்டோரும், இஸ்ரேலில் 11 பேரும் உயிரிழந்துள்ளனர். ஐ.நா., உலக நாடுகள் அமைதிக்கு அழைப்பு விடுத்த போதிலும், இருதரப்பும் பின்வாங்காமல் உறுதியாக இருப்பதால், இந்தப் போர் ஒருநீண்டகால மோதலாக மாறும் சூழல் நிலவுகிறது.

## இலங்கை கடற்பகுதியில் மற்றொரு ஈரான் கப்பல்

**கொழும்பு, மார்ச் 5:** இலங்கை கடற்பகுதியையொட்டி நிலைகொண்டுள்ள மற்றொரு ஈரான் கப்பலில் உள்ளவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து நாடாளுமன்றத்தில் விளக்கமளித்த அந்நாட்டு அரசு, மனிதாபிமான அடிப்படையில் உயிர்களைக் காப்பாற்றுவதற்கே தற்போதைய சூழலில் முன்னுரிமை அளிக்கப்படுவதாகத் தெரிவித்தது.

## அரபு நாடுகளைப் போரில் தள்ள சூழ்ச்சி: ரஷியா

**மாஸ்கோ, மார்ச் 5:** மத்திய கிழக்கில் நிலவி வரும் பதற்றத்தைப் பயன்படுத்தி, அரபு நாடுகளைத் தங்களுக்கு சாதகமான ஒரு பெரும் போரில் ஈடுபடுத்தும் சூழ்ச்சியுடன் அமெரிக்கா, இஸ்ரேல் செயல்படுவதாக ரஷியா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஏற்கெனவே, இவ்விவகாரம் குறித்து சில வளைகுடா நாடுகளின் தலைவர்களுடன் ரஷிய அதிபர் புதின் அண்மையில் தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தினார். அப்போது, ஈரானுடனான சுமுகமான உறவைப் பயன்படுத்தி இந்த மோதலைத் தணிக்க முயற்சிகள் எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.












**Pink Patrol initiative was launched for the first time in:**

A) Chennai
B) Coimbatore
C) Nilgiris
D) Madurai

**பிங்க் ரோந்து முயற்சி முதன்முறையாக இங்கு தொடங்கப்பட்டது:**

அ) சென்னை
ஆ) கோயம்புத்தூர்
இ) நீலகிரி
ஈ) மதுரை




**The patrols will focus on safeguarding girl students from harassment during school and college opening and closing hours.**

**Tamil Nadu's fourth Biodiversity Heritage Site is:**
A) Arittapatti
B) Kasampatty
C) Nagamalai hillock
D) Elathur Lake

**தமிழகத்தின் நான்காவது பல்லுயிர் பாரம்பரிய தளம்:**

A) அரிட்டாபட்டி
B) காசம்பட்டி
C) நாகமலை மலை
D) இலத்தூர் ஏரி




- **Arittapatti – Madurai**
- **Kasampatty – Dindigul**
- **Elathur Lake – Erode**

**India’s first drone testing centre has been set up at:**

A) Hosur SIPCOT
B) Sriperumbudur
C) SIPCOT Vallam Vadagal
D) Oragadam

**இந்தியாவின் முதல் ட்ரோன் சோதனை மையம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது:**

A) ஒசூர் SIPCOT
B) ஸ்ரீபெரும்புதூர்
C) SIPCOT வல்லம் வடகல்
D) ஒரகடம்




**The Tamil Nadu Global Startup Summit (TNGSS) 2025 was held at:**

A) Chennai
B) Madurai
C) Coimbatore
D) Tiruchirappalli

**தமிழ்நாடு உலகளாவிய தொடக்கநிலை உச்சி மாநாடு (TNGSS) 2025 இங்கு நடைபெற்றது:**

A) சென்னை
B) மதுரை
C) கோயம்புத்தூர்
D) திருச்சிராப்பள்ளி




The summit was organised by the Tamil Nadu Startup and Innovation Mission (StartupTN)

**The Tamil Nadu Panchayats Act was enacted in:**

A) 1992
B) 1993
C) 1994
D) 1998

**தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம் இயற்றப்பட்டது:**

A) 1992 B) 1993 C) 1994 D) 1998




Tamil Nadu Urban Local Bodies Act, 1998

**RUCO initiative was launched by:**

A) Ministry of Environment, Forest and Climate Change
B) NITI Aayog
C) Food Safety and Standards Authority of India
D) Ministry of Petroleum and Natural Gas

**RUCO முன்முயற்சி பின்வருவனவற்றிற்காக தொடங்கப்பட்டது:**
A) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்
B) நிதி ஆயோக்
C) இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம்
D) பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம்





**Consider the following statements:**

1. The **Naagam app** is designed to streamline snake rescue operations in Tamil Nadu.
2. It was unveiled by the Tamil Nadu Forest Department in July 2025.
3. The application is modelled after the SARPA snake rescue platform of Kerala.

Which of the statements given above are correct?
A) 1 and 2 only
B) 2 and 3 only
C) 1 and 3 only
D) 1, 2 and 3

பின்வரும் கூற்றுகளைக் கவனியுங்கள்:
1. நாகம் செயலி தமிழ்நாட்டில் பாம்பு மீட்பு நடவடிக்கைகளை நெறிப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது.
2. இது ஜூலை 2025 இல் தமிழ்நாடு வனத்துறையால் வெளியிடப்பட்டது.
3. இந்த செயலி கேரளாவின் SARPA பாம்பு மீட்பு தளத்தை மாதிரியாகக் கொண்டுள்ளது.
மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எவை சரியானவை?
A) 1 மற்றும் 2 மட்டும்
B) 2 மற்றும் 3 மட்டும்
C) 1 மற்றும் 3 மட்டும்
D) 1, 2 மற்றும் 3




**Consider the following statements:**

1. The Tamil Nadu Endangered Species Conservation Fund was announced in 2024.
2. The fund has an initial corpus of ₹50 crore.
3. The responsibility of managing the fund has been given to the Advanced Institute of Wildlife Conservation in Vandalur.

Which of the statements given above are correct?
A) 1 and 2 only
B) 2 and 3 only
C) 1 and 3 only
D) 1, 2 and 3

பின்வரும் கூற்றுகளைக் கவனியுங்கள்:
1. தமிழ்நாடு அழிந்து வரும் உயிரினப் பாதுகாப்பு நிதி 2024 இல் அறிவிக்கப்பட்டது.
2. இந்த நிதியின் ஆரம்ப நிதி ₹50 கோடி.
3. இந்த நிதியை நிர்வகிக்கும் பொறுப்பு வண்டலூரில் உள்ள மேம்பட்ட வனவிலங்கு பாதுகாப்பு நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது.
மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எவை சரியானவை?
A) 1 மற்றும் 2 மட்டும்
B) 2 மற்றும் 3 மட்டும்
C) 1 மற்றும் 3 மட்டும்
D) 1, 2 மற்றும் 3




The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

**The report titled *"Start-Up Ecosystem in Tamil Nadu: Opportunities and Challenges"* was prepared by:**

A) NITI Aayog
B) Ministry of Commerce and Industry
C) State Planning Commission
D) Startup India Mission

**"தமிழ்நாட்டில் ஸ்டார்ட்-அப் சுற்றுச்சூழல் அமைப்பு: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்" என்ற தலைப்பிலான அறிக்கையை தயாரித்தவர்:**

A) நிதி ஆயோக்
B) வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்
C) மாநில திட்டமிடல் ஆணையம்
D) ஸ்டார்ட்அப் இந்தியா மிஷன்




**The Tamil Nadu Siddha Medical University will be established in:**

A) Madurai
B) Coimbatore
C) Chennai
D) Tiruchirappalli

**தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் இங்கு நிறுவப்படும்:**

அ) மதுரை
ஆ) கோயம்புத்தூர்
இ) சென்னை
ஈ) திருச்சிராப்பள்ளி

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com